### பிறந்தநாள் வாழ்த்துக் கூறிய

# தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு ராகுல் காந்தி நன்றி!

புதுடெல்லி, ஜூன் 21-

“இந்தியாவின் கொள்கை, நமது அரசியலமைப்பு மற்றும் கூட்டாட்சித் தத்துவத்தைப் பாதுகாப்பதற்கான நமது கூட்டு உறுதிப்பாடு நம்மைத் தொடர்ந்து வழிநடத்தும் இது நமது ஜனநாயகத்தின் ஆன்மாவிற்கான போராட்டம், நாம் வெற்றி பெறும் வரை இதனை ஒன்றிணைந்து நடத்துவோம்” என தனக்குப் பிறந்தநாள் வாழ்த்துக் கூறிய கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி நன்றி தெரிவித்தார்.

### தேர்வு அச்சத்தால் தற்கொலை செய்த மாணவியின் குடும்பத்தாருக்கு இரங்கல்!

# நீட் ஒழிப்பு; திராவிட மாடல் அரசின் நடவடிக்கைகளை த.வெ.க. அரசு சமரசமின்றி தொடர்ந்திட வேண்டும்!

## சட்டமன்ற எதிர்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் வலியுறுத்தல்!

சென்னை, ஜூன் 21-

நீட் தேர்வை ஒழிப்பதற்காக திராவிட மாடல் அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளையும் சட்டப் போராட்டத்தையும் த.வெ.க. அரசு சமரசமின்றி தொடர்ந்திட வேண்டும் என்றும், நீட் தேர்வு அச்சத்தால் தற்கொலை செய்த சேலம் மாணவி குடும்பத்தாருக்கு இரங்கலை தெரிவித்துக் கொள்வதாகவும் குறிப்பிட்டு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

அது வருமாறு

நீட் தேர்வுக்கு தயாராகி வந்த சேலம் மாவட்டத்தை சேர்ந்த தங்கை கோபிகா, தேர்வு அச்சத்தில் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் அறிந்து அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

எப்படியும் டாக்டராகிவிடுவார் என்று ஆசை ஆசையாய் வளர்த்த அன்பு மகளை, நீட் அரக்கனிடம் பலி கொடுத்து தவிக்கும் கோபிகாவின் பெற்றோருக்கு என் ஆறுதலையும் இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தகுதி, தகுதி என்று சொல்லி திணிக்கப்பட்ட #NEET, Question Paper Leak, ஆள்மாறாட்டம், பயிற்சி மைய கொள்ளை, அச்சுறுத்தும் Exam Hall Frisking என மாபெரும் உயிர்கொல்லும் Scam ஆகியிருக்கிறது.

மோசடியான NEET தேர்வை ஒன்றிய அரசு ஒழித்தே ஆக வேண்டும்.

கழகத்தலைவர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு, நீட் ஒழிப்பிற்காக எடுத்த உறுதியான நடவடிக்கைகளையும் சட்ட போராட்டத்தையும் த.வெ.க அரசு சமரசமின்றி தொடர்ந்திட வேண்டும்.

இந்த நேரத்தில், NEET தேர்வுக்குத் தயாராகும் தம்பி தங்கைகள், Exam Stressக்கு ஆளாகாமலும், தவறான முடிவுகளை எடுக்காமலும் தன்னம்பிக்கையுடன் இச்சூழலை எதிர்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.

### மேகதாது அணை தொடர்பான தனித் தீர்மானம்:

# திருத்தங்களை இணைத்ததில் மகிழ்ச்சி!

## சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, ஜூன் 21-**

**தமிழ்நாடு சட்டப் பேரவையில் நேற்று மேகதாது அணை தொடர்பாக தனித் தீர்மானம்ஒன்றுஒருமனதாகநிறைவேற்றியது. அத்தீர்மானத்தில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்திய, இரண்டு திருத்தங்கள்சேர்க்கப்பட்டதற்குமகிழ்ச்சிஅடைவதாக தமது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.**

**அவரது பதிவு வருமாறு:**

தமிழ்நாட்டு விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் வகையில், மேகதாதுவில்அணைகட்டமுயற்சிக்கும்கர்நாடகாவின் செயலுக்கு எதிராக, தமிழ்நாடு சட்டமன்றத்தில்கொண்டுவரப்பட்டதனித் தீர்மானத்தை தி.மு.கழகம் சார்பில் ஆதரித்து உரையாற்றினோம்.

கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மேகதாதுவில்அணைகட்டமுயல்வதுNewDispute ஆக இருப்பதால், The InterState Water DisputesAct1956ன்படிபுதியதனிநடுவர் மன்றம்அமைக்கவேண்டும்என்றதிருத்தத்தைத்தீர்மானத்தில்சேர்க்கவேண்டும் என்றும்,,

இந்த தீர்மானத்தை கடிதமாக ஒன்றிய அரசுக்கு அனுப்பாமல், தமிழ்நாட்டு சட்டமன்றநாடாளுமன்றஉறுப்பினர்கள்ஒரு குழுவாகச்சென்றுநேரில்வழங்கவேண்டும் என்றும் வலியுறுத்தினோம்.

நாம்அளித்தத்திருத்தத்தைஇணைத்து ஒருமனதாகதீர்மானம்நிறைவேற்றப்பட்டதில் மகிழ்ச்சி கொள்கிறோம்.

காவிரி மீதான தமிழ்நாட்டின் உரிமையை நிலைநாட்ட தமிழ்நாடு அரசு எடுக்கும் அனைத்து முயற்சிகளுக்கும் தி.மு.கழகம் துணை நிற்கும்!

இவ்வாறுஉதயநிதிஸ்டாலின்அவர்கள் பதிவிட்டுள்ளார்.

### சட்டம் ஒழுங்கு சீர்கேடு – பொதுமக்கள் வீதியில் இறங்கிப் போராடுகிறார்கள்!

# எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் - கட்சித் தலைவர்கள் உரையை நேரலையில் ஒளிபரப்ப வேண்டும்!

## சட்டப் பேரவை உறுப்பினர்களின் உரையை நேரலையில் ஒளிபரப்பாதது குறித்து முன்னாள் அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேட்டி!

**சென்னை, ஜூன் 21–**

**சட்டப்பேரவையில் உறுப்பினர்களின் உரையை நேரலையாக ஒளிபரப்ப வேண்டும் என்றும், ஆளுநர் உரை மீதான விவாதத்தில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் கட்சித் தலைவர்கள் உரையை நேரலையில் ஒளிபரப்ப வேண்டும் என்று பேரவைக்கு வெளியே செய்தியாளர்களுக்கு பேட்டியளிக்கையில் முன்னாள் அமைச்சர் சா.சி.சிவசங்கர் குறிப்பிட்டார்.**



முன்னாள் அமைச்சர் சா.சி. சிவசங்கர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு :-

ஆளுநர் உரை மீதான விவாதத்தில் தி.மு.க.சார்பாக பேசுகின்ற வாய்ப்பை கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும் வழங்கி இன்றைக்கு சட்டமன்றத்தில் என்னுடைய கருத்தை பதிவு செய்தேன். அந்தக் கருத்துகள் நேரலையில் வரும் என்று நாங்கள் எதிர்பார்த்தோம். ஆனால் நேரலையில் வழங்கப்படாததன் காரணத்தினால் அந்தக் கருத்துகளை உங்களிடத்தில் பகிர்ந்து கொள்ளவே உங்களை சந்திக்கிறேன்.

**மரபு மீறிய செயல்!**

ஆளுநர் உரை மாத்திரமல்ல, அந்த உரை நிகழ்த்துகின்ற நேரத்தில் முன்னும் பின்னும் நடைபெற்ற சம்பவங்களையும், அது ஏற்படுத்தி இருக்கின்ற தாக்கத்தையும் குறித்து சட்டப்பேரவையில் நான் பதிவு செய்தேன். பேரவையில் ஆளுநர் உரைக்கு முன்பாக தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடுவதும், அவரது உரைக்கு பின்பாக தேசிய கீதம் பாடுவதும் ஒரு மரபாக தமிழ்நாட்டில் கடைப்பிடிக்கப்பட்டு வருவதை மீறி நேற்றைக்கு தேசிய கீதத்தை இரண்டு முறை பாட வேண்டிய அவசியம் என்ன என்ற வினாவை நான் எழுப்பினேன்.

அதற்கு நேற்றைக்கு எங்களுடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல த.வெ.க. விற்கும் பா.ஜ.க.விற்கும் ஒரு இணக்கமான உறவு இருக்கிறதோ என்ற அந்த அய்யம் தான் வலுப்பெற்று இருக்கிறது. காரணம் ஆளுநர் அவர்கள் நேற்றைக்கு நடந்த நிகழ்வை ஒரு சரித்திர நிகழ்வு என்று பதிவு செய்கிறார். ஆளுநர் உரை நிகழ்த்துவதற்கு ஒரு இணக்கமான முறையில் உரை நிகழ்த்திச் சென்று இருக்கிறார் என்று சட்டப்பேரவைத்தலைவர் நன்றி தெரிவிக்கிறார்.

இப்படி ஒருவருக்கொருவர் நன்றி தெரிவிப்பதும், பாராட்டிக் கொள்வதும் இதைத்தான் வெளிப்படுத்துகிறது என்கின்ற கருத்தைத் தான் நாங்கள் பதிவு செய்தோம். இது மக்களுக்குச் சென்று சேர வேண்டும் என்று எதிர்பார்த்தோம். நேரலையில் அதற்கான வாய்ப்பு வழங்கப்படவில்லை.

**கழக ஆட்சியின் கருத்துகளை வேறு வார்த்தைகளில் கூறுகிறார்கள்!**

ஆளுநர் உரையில் இடம் பெற்றிருக்கின்ற கருத்துகள் ஏற்கனவே திராவிட முன்னேற்றக் கழக திராவிட மாடல் ஆட்சி நடைபெற்ற நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகளாக பறைசாற்றப்பட்டவை. அது மும்மொழிக் கொள்கைக்கு எதிரான கருத்தாக இருந்தாலும், நீட் தேர்வுக்கு எதிர்ப்பாக இருந்தாலும் மீனவர் நலன்களை பாதுகாப்பதாக இருந்தாலும் எல்லாவற்றிலும் திராவிட முன்னேற்றக் கழக கருத்துகளையே அவர்கள் மீண்டும் இங்கே வேறு வார்த்தைகளைப் போட்டு வேறு வண்ணம் பூசி வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

அவர்கள் புதிதாக சொன்னது என்றால் சிங்கப் பெண் மாத்திரம் தான். அதுவும் ஏற்கனவே இருக்கின்ற காவல் துறையில் பணியாற்றுகின்றவர்களுக்கு வேறு ஒரு சீருடையை அணிவித்து அது ஏதோ புதிய திட்டம் போல சொல்கிறார்கள் என்ற கருத்தையெல்லாம் பதிவு செய்தோம். அதற்குப் பதிலளித்த அமைச்சர் பெருமக்கள் மழுப்பலாக திசைதிருப்பு கின்ற வகையில் தான் பதிலளித்தார்கள். திங்கட்கிழமை அன்றைக்கு எங்களுடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உரையாற்ற இருக்கிறார். அப்படி உரையாற்றுகின்ற போது, அவர் உரையாற்றுவதை நேரலை செய்யவேண்டும். காரணம் இந்த ஆட்சி மீது நம்பிக்கை தீர்மானம் கொண்டு வருகின்ற போது அதிலே உரையாற்றிய அனைவருடைய உரையும் நேரலையில் சென்று சேர்ந்தது.

**எதிர்க்கட்சித் தலைவரின் கேள்விகள் நியாயமானவை!**

அப்படி சென்று சேர்ந்த நேரத்தில் எதிர்க்கட்சித் தலைவர் உரை நேரலையில் சென்று ஒரு மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறது. அவர் எழுப்பிய கேள்விகள் எல்லாம் நியாயமானவை தங்கள் மனதில் இருப்பதை என்று தமிழ்நாட்டு மக்கள் எண்ணுகின்ற அளவிற்கு அமைந்திருக்கிறது. ஆனால் அதற்கு முதலமைச்சர் அவர்கள் பதிலளிக்காமல் அமைதியாக இருந்தார். வீட்டிற்குப் போய் ஓர்க்கவுட் செய்து மாலை ட்விட்டரில் அதற்குப் பதில் அளித்தார்.

**நேரலையில் ஒளிபரப்ப வேண்டும்!**

அங்கே சட்டமன்றத்தில் கேட்கின்ற கேள்விகளுக்கு அவர் பதிலளிக்காமல் இருக்கின்ற காட்சியை மக்கள் பார்த்து விட்டார்கள் என்ற காரணத்தினால் தான் இன்றைக்கு நேரலை செய்யாமல் தவிர்த்து விட்டார்களோ என்ற சந்தேகம் எங்களுக்கு எழுந்திருக்கிறது. எனவே சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் மரியாதைக்குரிய உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகின்ற நேரத்திலும், மற்ற சட்டமன்றக் கட்சித் தலைவர்கள் உரையாற்றுகின்ற நேரத்திலும் அவற்றை நேரலையில் ஒளிபரப்ப வேண்டும் என்கின்ற அந்தக் கருத்தை இந்த நேரத்தில் நான் வலியுறுத்துகிறேன்.

இதனைத் தொடர்ந்து செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளுக்கு அளித்த பதில்கள் வருமாறு:-

நாங்கள் முதலில் கேள்வி-பதில் பகுதியை நேரலையில் ஒளிபரப்பி வந்தோம். அதையெல்லாம் செய்யவில்லை என்று சொல்லி தான் ஒரு மாற்றம் வேண்டும் என்று சொல்லி தான் ஆட்சிக்கு வந்திருக்கிறார்கள். சொன்ன மாற்றத்தை அவர்கள் செயல்படுத்தவில்லை என்பதுதான் எங்களுடைய கருத்து.

இந்த ஆட்சி அமைந்ததும், புதுசு புதுசு என்று பேசுகிறீர்கள், எங்கள் கழகத் தலைவர் ஆறுமாதம் அவகாசம் கொடுத்தார். அது எதற்கு என்றால் புதிய திட்டங்களை நீங்கள் அறிவித்த திட்டங்களை செயல்படுத்து வதற்கு புதிய கொள்கையை வழி வகுப்பதற்கு.

**சட்டம் ஒழுங்குப் பிரச்சினைக்கு வாய் திறக்காத முதல்வர்!**

ஆனால் நடைமுறையில் அன்றாடம் சட்டம் ஒழுங்கு பிரச்சினையை சரி செய்வதற்கும், மிகக் குறிப்பாக மக்கள் இன்றைக்குப் பாலியல் பிரச்சினைக்கு எதிராக இன்றைக்கு வெகுண்டெழுந்திருக்கிறார்கள். அது கோவையில் நடந்ததாக இருந்தாலும், கும்மிடிப்பூண்டியில் நடந்ததாக இருந்தாலும், சிறு குழந்தைகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், அதை எதிர்த்து எதிர்க்கட்சிகள் நாங்கள் களத்திற்கு வருவதற்கு முன்பாக, எல்லா இடங்களிலும் மக்கள் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். எனவே அதற்கு வாய் திறக்க வேண்டும் என்பதற்காகத்தான் நாங்கள் வலியுறுத்தினோம்.

இன்றைக்கும் முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லவில்லை. காவல்துறைக்கு பொறுப்பான அமைச்சர் அவர். ஆனால் அவர் பதில் சொல்லாமல், காவல் துறைக்கு நிழல் அமைச்சர் போல் ஆதவ் அர்ஜூனா பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார். எனவே முதலமைச்சர் இதற்கெல்லாம் பதில் சொல்ல வேண்டும் என்பதுதான் எதிர்க்கட்சிகள் என்ற முறையில் மக்களுடைய குரலாக இன்றைக்கு நாங்கள் இங்கே பதிவு செய்து கொண்டிருக்கிறோம்.

நாங்கள் புதிதாக ஆட்சி அமைத்திருக்கிறோம், புதியதாக வந்திருக்கிறோம் கேள்வி பதில், ஜீரோ அவர்ஸ் எல்லாம் அடுத்த கூட்டத் தொடரில் பார்த்துக் கொள்ளலாம் என்று அலுவல் ஆய்வுக் குழுவில் அவர்கள் கூறினார்கள். அவர்கள் கோரிக்கையை நாங்கள் ஏற்றுக் கொண்டோம்.

**முதல்வரை கேள்வி கேட்டால் ஆதவ் பதில் கூறுகிறார்!**

ஏற்கனவே இருக்கின்ற காவல் துறைதான் இவை எல்லாம் செய்துக்கிட்டு இருக்கு. நீங்கள் புதியதாக என்ன செய்தீர்கள் என்று ஆஸ்டீன் கேட்டார். அதற்கு முதலமைச்சர் பதில் சொல்லவில்லை என்றுதான் ஆஸ்டின் சொன்னார். அதற்கு பதில் சொல்லாமல் திசை திருப்புகின்ற வகையில் கொளத்தூரையெல்லாம் இழுத்துப் பேசினார் ஆதவ் அர்ஜூனா. நாங்கள் எங்கள் எதிர்ப்பை காண்பித்தோம்.

**பாலியல் பிரச்சினைகளை 6 மாதம் கழித்து பேசமுடியுமா?**

நீண்ட திட்டங்களுக்கு, சட்டம் ஒழுங்கு அன்றாடம் பாதுகாக்க காவல்துறை இருக்கு, அந்தக் காவல் துறைக்குத் தலைவராக முதலமைச்சர் இருக்கிறார். இதனை உடனடியாக செய்ய வேண்டும். இன்றைக்கு ஒரு உயிர் போய் இருக்கு, அதனை 6 மாதம் கழித்து திருப்பிக் கொடுக்க முடியுமா? ஒரு சிறுமிக்கு மிகப் பெரிய கொடூரம் நடந்திருக்கு 6 மாதம் கழித்து பேச முடியுமா? இது அன்றாடம் பேச வேண்டியது. நாங்கள் பேசியது இல்லை. பொது மக்கள் பேசுகிறார்கள். பொதுமக்கள் வீதியில் இறங்கி போராடிக் கொண்டிருக்கிறார்கள். நீங்களே பார்க்கிறீர்கள். பொதுமக்களுக்கு அவர்கள் பதில் சொல்ல வேண்டும். அவர்கள் பொதுமக்களையும் மதிப்பதாக இல்லை.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேட்டியளித்தார்.

# நாக்பூர் மாணவருக்கு அபுதாபியில் ‘நீட்’ தேர்வு மையம் ஒதுக்கீடு!

## மறுதேர்விலும் நீடிக்கும் குளறுபடிகள்!

நாக்பூர், ஜூன் 22-

இன்று நடைபெறவுள்ள நீட் இளநிலை மறுதேர்வுக்கு நாக்பூரைச் சேர்ந்த மாணவருக்கு அபுதாபியில் தேர்வு மையம் ஒதுக்கப்பட்டுள்ளது அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

கடந்த மே 3ம் தேதி நடத்தப்பட்ட நீட் நுழைவுத்தேர்வு, வினாத்தாள் கசிவு உள்ளிட்ட முறைகேடுகள் காரணமாக ரத்து செய்யப்பட்டது. இதற்கான மறுதேர்வு நாளை நடத்தப்படும் என்று தேசிய தேர்வு முகமை அறிவித்துள்ளது. தேர்வின் போது மாணவர்கள்பின்பற்றவேண்டிய கட்டுப்பாடுகள், வழிகாட்டுதல்கள் உள்ளிட்டவற்றை தேசிய தேர்வு முகமை வெளியிட்டுள்ளது. தேர்வுக்கான முன்னேற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

நீட் தேர்வு இன்று நடைபெறும் நிலையில், நாடு முழுவதும் இதற்கான ஒத்திகை நடத்துகிறது. இந்நிலையில் இன்று நடைபெறவுள்ள நீட் இளநிலை மறுதேர்வுக்கு நாக்பூரைச் சேர்ந்த அப்துல்லா முகமது தாலிப் என்ற மாணவருக்கு அபுதாபியில் தேர்வு மையம் ஒதுக்கப்பட்டுள்ளது அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

சம்பந்தப்பட்ட மாணவர் புகார் அளித்ததை தொடர்ந்து, மகாராஷ்டிராவிற்குள் தேர்வு மையம் ஒதுக்குவதாக தேர்வு முகமை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். குளறுபடிகளால் ரத்து செய்யப்பட்ட நீட் தேர்வுக்கான மறுதேர்விலும் பல்வேறு முறைகேடுகளில் குளறுபடிகளும் தொடர்வதன் அறிகுறியே இது என விமர்சனங்கள் எழுந்துள்ளன.

### திறந்தவெளி நெல் சேமிப்புக் கிடங்கில்

# மழையில் நனைந்து ஒன்றரை லட்சம் நெல் மூட்டைகள் - சேதம்!

## விவசாயிகள் வேதனை! அதிகாரிகள் அலட்சியம்!

தஞ்சை, ஜூன் 21-

கும்பகோணம் அருகே திறந்தவெளி நெல் சேமிப்புக் கிடங்கில் ஒன்றரை லட்சம் நெல் மூட்டைகள் மழையில் நனைந்து வீணாகி கிடப்பதால் விவசாயிகள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

தஞ்சாவூர், கும்பகோணம் அருகே உள்ள பட்டீஸ்வரத்தில் திறந்தவெளி சேமிப்பு கிடங்கு உள்ளது. கும்பகோணம், திருவிடைமருதூர், பாபநாசம் சுற்றுவட்டார பகுதிகளில் விவசாயிகளிடம் பெறப்பட்ட நெல் மூட்டைகள், பட்டீஸ்வரம் சேமிப்பு கிடங்கில் அடுக்கி வைக்கப்படுகின்றன.

இந்த கிடங்கில் 30 ஆயிரம் மெட்ரிக் டன் வரை நெல் மூட்டைகள் சேமித்து வைக்கக்கூடிய வகையில் உள்ளன. தற்போது இந்த சேமிப்பு கிடங்கில் 25 ஆயிரம் மெட்ரிக் டன் நெல் மூட்டைகள் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. மேலும் தார்ப்பாய் பற்றாக்குறையால் பெரும்பாலான நெல் மூட்டைகள் மூடி வைக்கப்படாமல் மழையில் நனைந்தும் வெயிலில் காய்ந்து வருகின்றன.

இந்நிலையில், கும்பகோணம் பகுதிகளில் நேற்று இரவு பெய்த மழை காரணமாக பட்டீஸ்வரம் திறந்தவெளி நெல் சேமிப்புக் கிடங்கில் இருந்த நெல் மூட்டைகள் நனைந்து வீணாகியுள்ளன. மாவட்ட நிர்வாகத்தின் அலட்சியத்தால் நெல் மூட்டைகள் சேதமடைந்திருப்பதாக விவசாயிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

# இலங்கையில் கொடூரமாக பரவும் டெங்கு !

## 44,000க்கும் மேற்பட்டோர் பாதிப்பு!

கொழும்பு, ஜூன் 21-

இலங்கையில் கடந்த சில ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு இந்த ஆண்டு டெங்கு காய்ச்சல் பரவல் மற்றும் பாதிப்பு மிக தீவிரமாக உள்ளது. ஜனவரி மாதம் முதல் இதுவரை 44,000 பேருக்கும் மேற்பட்டோர் அந்நாட்டில் டெங்குவால் பாதிக்கப்பட்டு உள்ளனர்.

இதுவரை டெங்கு காய்ச்சலுக்கு அந்நாட்டில் ஐந்து குழந்தைகள் உட்பட 28 பேர் வரை உயிரிழந்துள்ளதாக ஆணையின் சுகாதாரத் துறை அதிகாரிகள் தகவல் வெளியிட்டு உள்ளனர். இதனால் அங்குள்ள அரசு மருத்துவமனைகள் கடும் நெருக்கடிக்கு ஆளாகி உள்ளன.

இலங்கை தலைநகரமான கொழும்புவில் மட்டுமே அதிகபட்சமாக சுமார் 11,000 டெங்கு பாதிப்புகள் பதிவாகியுள்ளன. கொழும்பு தவிர்த்து கம்பஹா, மாத்தறை, களுத்துறை, இரத்தினபுரி, காலி, கண்டி, அம்பாந்தோட்டை, கேகாலை மற்றும் குருநாகல் உள்ளிட்ட நகரங்களிலும் டெங்கு பரவல் அதிகரித்து காணப்படுகிறது.

முன்னதாக கடந்த 2019ஆம் ஆண்டு இலங்கையில் 1 லட்சத்திற்கும் மேற்பட்டோர் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டதே மிக மோசமான பதிவாக இருந்தது. தற்போதைய பரவல் வேகத்தை பார்த்தால் இந்த ஆண்டு இறுதிக்குள் பதிவான டெங்கு பரவலின் மோசமான நிலையை மீண்டும் எட்டக்கூடும் என அதிகாரிகள் எச்சரித்து உள்ளனர்.